DEPOSITION OF WITNESS

(Chapter XXV BNSS)

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

ST.C.No. 142/2022 P.W. 1 வீரமணி த/பெ.ரெத்தினம்

BNSS 348 பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அசா.1 திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

நாள் 25.03.2026.

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மன்னார்குடி உப்புக்கார தெருவில் இலக்கம் 21ல் வசிக்கும் சிங்காரம் மகன் ஜெயராஜ் எனது நண்பர் என்றால் சரிதான். மேற்படி ஜெயராஜ் இந்த எதிரி மீது இதே நீதிமன்றத்தில் ஒரு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. இதே நீதிமன்றத்தில் நானும், ஜெயராஜிம் பல வழக்குகளில் பல வெவ்வேறான நாட்களில் ஆஜராகியிருக்கிறோம் என்றால் அதுசம்பந்தமாக எனக்கு தெரியாது. ஜெயராஜ் இந்த எதிரி மீது ஒரு வழக்கு இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. (ஜெயராஜ் எதிரி மீது தாக்கல் செய்துள்ள வழக்கு ஆவணத்தை காட்டி கேட்டபோது சாட்சி எனக்கு 54 வயது ஆகிவிட்டதால் கண்ணாடி போட்டால்தான் படிக்க முடியும் என்பதால் நீங்கள் கொடுத்த ஆவணத்தை என்னால் படிக்க முடியாது என்று கூறுகிறார்)

ஜெயராஜ் என்னுடைய நெருங்கிய நண்பர் என்பதாலும், ஜெயராஜ் இதே நீதிமன்றத்தில் இதே எதிரி மீது STC.2011/2021 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதன் பிறகு இந்த வழக்கு காசோலையை வைத்து என்னை புகார்தாரராக ஜோடித்து எதிரிக்கு எதிராக ஜோடித்ததால் தான் மேற்படி சங்கதி என்னால் படிக்க முடியவில்லை என்று ஒரு பொய்யான சங்கதியை புகுத்திகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.